# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1720/38 - 2011 අගෝස්තු 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.08.25

**1720/38 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை**

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : 4/2/1/63(ii).
காணி அமைச்சின் குறிப்புஇல. : எல்டீ/05/2004/சீஈபீ/18.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை அரசாட்சியார் எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்தின் தொம்பெ பிரதேச செயலாளர் பிரிவில், கங்கபட பத்துவ சிறுபிரிவில் கிராம உத்தியோகத்தர் பிரிவில் இல. 384 உடகம கிராமத்தில் அமைந்துள்ள நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட இல. மு. பீ. கம் 3472 அத்துடன் 2005.08.17 ஆந் திகதிய மூலப் படத்தில் காணித்துண்டு 01 ஆகக் காட்டப்பட்டுள்ள சுமார் 0.0460 ஹெக்டயார் அளவான காணித் துண்டின் விபரம் பின்வருமாறு:

**துண்டு இல. 01**

காணியின் பெயர் : பவில கும்புர ; விபரம் : நெல்வயல் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : டபிள்யூ. பீ. சீ. சமரநாயக, 'சமரபாய', தியவால, கிரிந்திவெல ; விஸ்தீரணம் : 0.0460 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2011 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு தொம்பே பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். ஜீ. ஜே. பீ. விஜயசிரிவர்தன,
பிரதேச செயலாளர்,
தொம்பே.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
தொம்பே,
வேகே - கிரிந்திவெல,
2011.07.06.

09 - 308

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : மெ/ஆஅபி/கா/1/ 1/13/11.
காணி அமைச்சின் இல.: எல்/03/ஜெ/95/எப்ஆர்/202.

மொனராகலை மாவட்ட, மெதகம பிரதேச செயலாளர் மூலம் 1615/24 ஆம் இலக்கமும் 2009.08.20 ஆம் திகதியும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 7 ம் பிரிவின் கீழ் திருத்தத்தின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட அசல் வரைவு இல. மொ/எம்.டீ.ஜீ./08/19 என்றன்றி அ. வ. 185 எனத் திருத்தம் பெற வேண்டும் எனப் பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகிறேன்.

கே. எச். ஏ. கே. நிஸாந்த,
பிரதேச செயலாளர்,
மெதகம.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
மெதகம.

09 - 307

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.